முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மேற்படி சாலை சந்திப்பில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க அங்கே பல்லடுக்கு மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்றுவருகிறது. திட்ட அறிக்கை கிடைக்கப்பெற்றதும், உரிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, விரைவில் பணி தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

திரு. கே.பி. நாகராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆவன செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் பணிவான வணக்கத்தையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

233—

ஆவின் பாலகக் கட்டடம்

***13301—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2013 ஏப்ரல் 16

(அ) புதுக்கோட்டை மாவட்டம், இராஜாளிப்பட்டி ஊராட்சி, இராஜாளிப்பட்டி கிராமத்திலுள்ள ஆவின் பாலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். புதுக்கோட்டை மாவட்டம், இராஜாளிப்பட்டி ஊராட்சியில் ஆவின் பாலகங்கள் இயங்கவில்லை. பால் உற்பத்தியாளர் சங்கம் இயங்கி வருகிறது. ஆவின் பால் விற்பனை நிலையத்திற்குச் சொந்தமான காலி மனை உள்ளது. சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டால் கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி கரிகால்பெருவளத்தான் அன்று வாளெடுத்துப் போரிட்டு வரவழைத்த காவேரியை, இன்று வெள்ளைத் தாளெடுத்தே சட்டப் போரிட்டு வென்றெடுத்து (மேசையைத் தட்டும் ஒலி) பொன்னி நதி காத்திட்ட பொன்னியின் செல்வி அம்மா அவர்களால் இன்று வளமாகிறது தமிழர் தம் பூமி, என்றும் நாங்கள் கடவுளாய் வழிபடும் தாய் உருவ சாமி.*

தமிழர்தம் உணர்விலும், உள்ளத்திலும் நீக்கமற முத்திரை பதித்து, சித்திரையை மீட்டெடுத்த தமிழகத்தின் தவப்பயனே, (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் போற்றும் மகாசக்தியே, இரண்டாம் வெண்மைப் புரட்சிமூலம் கூட்டுறவுச் சங்கங்களின் பால் உற்பத்தியை ஒரே ஆண்டில் உயர்த்திய மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஆலோசனையை ஏற்றுக்கொண்டு, தொடர்ந்து விராலிமலை சட்டமன்றத் தொகுதியில் புதிய பாலகங்கள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

2013 *ஏப்ரல்* 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ஆவின் விற்பனை நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து குறிப்பிட்ட இடத்தில் ஆவின் விற்பனை நிலையம் அமைக்க வேண்டுமென கோரிக்கை வரப்பெற்றால், உரிய ஆய்வு செய்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணை பெற்று அமைத்துக் கொடுக்கப்படும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பாலகங்கள் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

234—

அணையை விரிவுபடுத்துதல்

***7577—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தொகுதி, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், புரவிபாளையம் அணையை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?